யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

## ஆசிரியர் சம்பளம் பணமாக வழங்கமுடியாது

ஆசிரியர்களின் சம்பளத்தைப் பணமாக வழங்குவதற்கு வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அனுமதி வழங்கவில்லை என யாழ் கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார். நாட்டில் உள்ள ஏனைய மாகாணங்களிலும் ஆசிரியர்களின் சம்பளம் காசோலையாக வழங்கப்படும் பொழுது, வடமாகாணத்திற்கு மட்டும் காசாக வழங்க வேண்டும் என்று அரசை நிர்ப்பந்திக்க முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சுமார் 3½க் கோடி ரூபா ஆசிரியர்களின் சம்பளத்திற்கு தேவைப்படுகிறது. இப்பணம் தொலையுமிடத்து அத்தொகையை ஈடு செய்யும் பொருளாதார நிலைமை பணிப்பாளருக்கு இல்லை எனவும் முன்னைய காலங்களில் நடைபெற்ற கொள்ளைகளை இன்றுவரை திறைசேரியால் ஈடுசெய்ய முடியவில்லை எனவும் அவர் தெரிவித்கார் குறைந்த பட்சம் கல்வித் திணைக்கள ஊழியர்களிற்காவது பணமாக வழங்கும் படி விடுக்கப்பட்ட கோரிக்கை —04 பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4·00

# முரசொலி

முரசு 04 ஒலி 277 சனி 17-11-1990 (கார்த்திகை 01) ந. ஆகிர் 28

# சிறுபான்மை இனம் அரசுகளால் தொடர்ந்தும் புறக்கணிப்பு

### அமைச்சர் தொண்டமான் அதிருப்தி

அரசாங்கத்துக்கு நாம் எவ்வளவு தான் ஒத்துழைப்பு வழங்கிவந்த போதிலும் அது விடாப்பிடியாக பெரும்பான்மையினத்துக்கு மாத்திரமே சார்பாகச் செயற்பட்டு வருகிறது என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் நடைபெற்ற இ. தொ. கா பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு அதிருப்தி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் ''நாம் சிறுபான்மையினராக இருந்த போதும் அரசாங்கத்திற்கு எமது ஒத்துழைப்பை வழங்கியே வருகிறோம். எனினும் எவ்வளவு தான் ஒத்துழைப்பு வழங்கி வந்தபோதும் எம்மை முன்புபோல் தொடர்ந்தும் ஒதுக்கி வைத்தே விடுகின்றனர்'' என்றார்.

## மாவிட்டபுரம் வீடுகள் தகர்ப்பு

நேற்று நண்பகலில் மாவிட்டபுரம், குரும்பசிட்டிப் பகுதிகளில் உள்ள வீடுகள் சிலவற்றைச் சிங்கள இராணுவம் குண்டுவைத்துத் தகர்த்தது.

பலத்த சத்தத்துடன் குண்கள் வெடித்ததையும், குண்டுகள் வெடிக்கும் போது புகைபோல மேலே எழுந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (ப10)

## இலங்கை வங்கிக்கு நேற்று குமணா கப்பலில் பணம் வந்தது

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் கொழும்பில் எடுத்த முயற்சிகளையடுத்து யாழ் இலங்கை வங்கிக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபா பணமாக நேற்று குமணா கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது

இதேவேளை யாழ் செயலகத்தின் தேவைகளுக்கும், ஏனைய திணைக்களங்கள் சிலவற்றுக்கும் ஒரு குறிப்பிட்ட லட்சம் ரூபா பணம் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவக்கப்படுகிறது.

புகையிரதப்பகுதி ஒய்வூதியகாரருக்குரிய ஆடி, ஆவணி மாத வவுச்சர்களும், 20 லட்சம் ரூபா காசோலையும் இதில் வந்துள்ளன.

இக்கப்பலில் 3000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களும், மண்ணெண்ணெய், டீசல் என்பனவும் வந்துள்ளன.

இம்மாதம் 1 ஆம் திகதி இதே கப்பலில் கொழும்பு சென்ற கடும் நோயாளிகளில் குணமடைந்த சிலரும் நேற்று வந்திருந்தனர். (66)

## புதுப்பாலத்தடியில் இருதமிழர் ராணுவத்தால் உயிருடன் எரிப்பு

நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரையும், புளித்தீவையும் இணைக்கும் புதுப்பாலத்தடியில் இராணுவத்தினர் இரண்டு தமிழர்களைக் கதறக் கதற ரயர் போட்டு உயிருடன் எரித்துள்ளனர்.

இவ்வாறு ரயர் போட்டு எரிக்கப்பட்டவர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது. (71)

## அம்பாறை தமிழ் ஊழியருக்கு சம்பளம் இடைநிறுத்தம்

அம்பாறை மாவட்டத்தில் கடமைபுரியும் மட்டக்களப்பைச் சேர்ந்த பல தமிழ் அரச ஊழியர்களுக்குச் சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 16ம் திகதிக்குப் பின்னர் வேலைக்குச் சமுகமளிக்காத பல ஊழியர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு இன்மை, போக்வரத்து இன்மை, தமிழ் மூஸ் —04ஆம் பக்கம் பார்க்க

## புல்மோட்டை ராணுவத்தின் வெளியேறும் முயற்சி முறியடிப்பு

திருமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது நேற்று முன் தினம் காலை 8. 30 மணியளவில் அணைக்கட்டுப் பாலத்தடியில்வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

இத்தாக்குதலை அடுத்துஇராணுவத்தினர்காயமடைந்தவர் —04ஆம் பக்கம் பார்க்க

## திரியாய் மகாவித்தியாலயம் மீண்டும் இராணுவ முகாமாகியது

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் திரியாய்ப்பகுதியை நோக்கி காட்டுவழியாக வந்த இராணுவத்தினர் திரியாய் - மகாவித்தியாலயத்திற்குச் சென்றனர்.

இவ்வாறு பாடசாலையை அடைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகள் ஏற்கனவே வைத்த —04 ஆம் பக்கம் பார்க்க

## தெற்கில் ஜே. வி. பி. இயக்கம் மீண்டும் தலை தூக்குகிறது

கேகாலையில் ஜே. வி. பி. இயக்க முன்னாள் பொருளாளரும், குருநாகலையில் நான்கு ஜே வி. பி. சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்னர்.

மீசஹதென - மெனியாவல என்ற இடத்தில் 371 பேர் ஜே. வி. பி. சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள போதிலும்அவர்களில் 21பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர்.

இதே சமயம் கொழும்பு மாநகரில் ஜே. வி பி. சந்தேக நபர்களின் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருவதாக பாதுகாப்புப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

தெஹிவளையிலும், களுபோவிலையிலும் இரு வாகனங்களும், வாகனங்களின் உரிமையாளர்களும் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

காலியைச் சேர்ந்த வர்த்த —04ஆம் பக்கம் பார்க்க

### தமிழகத்தில் போராளிகள்விடுதலைசெய்ததாக

## அட்மிரலின் குற்றச்சாட்டிற்கு கருணாநிதி கண்டனம்

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் போராளிகளை, தமிழக அரசு விடுதலை செய்துவிட்டது என்ற இந்திய கடற்படை அட்மிரல் ராம்தாஸின் குற்றச்சாட்டை முதலமைச்சர் மு. கருணாநிதி மறுத்துவிட்டார்.

நேற்றுச் செய்தியாளர்களிடையே இதுகுறித்துக் கருத்து —04ஆம் பக்கம் பார்க்க

## வன்செயலில் இறந்த 250 பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது

தற்போதைய இராணுவ நடவடிக்கையினால் யாழ் மாவட்டத்தில் மரணமடைந்தோரில் 250 பேருக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் நிவாரணம் வழங்கியுள்ளனர்.

இவர்களுக்குத் துணி வகையும், உணவுப் பொருட்களும் நிவாரணப் பொருட்களாக வழங்கப்பட்டன.

1990 ஜூன் மாதத்திற்குப் பிற்பாடு இராணுவ நடவடிக்கையால் இறந்தோரின் முழு விபரமும் தற்போது சேகரிக்கப்படுகிறது. இப்பதிவை அலுவலக நேரத்தில் செய்து நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவக்கப்படுகின்றது. (74)

## வ. பி. போ. ச. ஊழியருக்கும் இலவச நிவாரண உணவு

கடந்த ஐந்து மாதகாலமாகச் சம்பளம் இன்றிக் கஷ்டப்படும் வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு இலவச நிவாரண உணவுப்பொருள் வழங்கப்படவுள்ளது.

—04ஆம் பக்கம் பார்க்க

## யாழ் அரசாங்க அதிபரிடம் மூதாட்டியின் மனக்குமுறல்

பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு அனாதரவான நிலையிலுள்ள ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த விதவையான 82 வயது வயோதிபமாது மரியம்மா சூசைப்பிள்ளை கடந்த 19 மாத காலமாகத் தர்மப் பணம் திடீரென்று நிறுத்தப்பட்டமையினால் தனது அவல நிலை பற்றி யாழ் அரசாங்க —04 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலிக்கு வந்த கடிதம்

### யாழ்ப்பாண வரைபடம்

'முரசொலி'. அண்மையில் அன்பளிப்பாக வெளியிட்ட யாழ்ப்பாண வரைபடம் மிக்க பயனுடையது. பல்வேறு துறைகள் சார்ந்தவர்களுக்கும் இது பலவகையிலும் உதவும்.

காலத்தின் தேவையறிந்து தாங்கள் ஆற்றிவரும் பணியைப் பாராட்டுகிறோம்.

அரண்போல் நம்மைக்காப்பது சேவை ஒன்றே தவிர, செய்யும் தொழில் தரும் இலாபமல்ல என்பதை அனுபவத்தில் கண்டவன் நான்.

க. கனகராசா
அதிபர்—'மில்க்வைற்'

---

## அறிவித்தல்

**யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்ற ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்களுக்கும்**

19.11.1990ஆம் திகதி காலை 11.00 மணிக்குக் கொக்குவில் உப — அலுவலகத்தில் என்னால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஒரு முக்கிய கலந்துரையாடலில் தவறாது பங்குகொள்ளும் வண்ணம் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சு. டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித்திணைக்களம்
யாழ்ப்பாணம்.
90.11.16.

11087

---

## அறிவித்தல்

**லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்**

லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மாணவர்கள் அனைவரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கோருகின்றேன்.

செல்வி பி. பத்மராணி,
செயலாளர்,
மாணவர் மன்றம்.

16-11-90.

11082

---

## 2-வது நினைவஞ்சலி

மலர்வு
15
—
8
—
1963



உதிர்வு
17
—
11
—
1988

### ஆ. நேசராசா (சுகன்யா)

என் அன்பும் பண்பும் பாசமும் கொண்ட
என் பாசத்தெய்வமே
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறுவதில்லை
என் சோகக் கண்ணீர்
உங்களை விட்டநாளிலிருந்து மூவரின்
கண்களால் கண்ணீர் சொரிகிறது
என் அன்புத் தெய்வமே!
எங்கு சென்றாலும் எங்கள்
மூவரின் சுகம் கேட்டு மடல் அனுப்புவீர்களே
இப்போ எங்கள் சுகம் கேட்கவும் உங்கள்
சுகம் கூறவும் எப்போ வருவீர்கள்
என் பாசத்தெய்வமே!
உங்கள் சிரித்தமுகமும் சிங்காரத்தோற்றமும்
காண்பது எப்போ அப்பா?

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்

A. S. K Villa
கரவெட்டிமேற்கு,
கரவெட்டி.

11081

---

## வழங்குநர்களைப் பதிவு செய்தல்-1991

### வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்

1991-ம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள். பதிவுக்கட்டணத்தைச் செலுத்திய தன் பேரில் என்னால் 31. 01. 1991-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் அவற்றிற்கான பதிவுக்கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தபாலில் அனுப்புவோர் பதிவுக் கட்டணத்தைக் காசோலையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ ''விசேட ஆணையாளர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்'' என்றபெயரில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

| | பொருட்கள், சேவைகள் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 1. | காகிதாதிகள் வழங்கல் | 50 00 |
| 2. | சுகாதார சேவைக்கான பொருட்கள் வழங்கல் | 25 00 |
| 3. | அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் வழங்கல் | 25 00 |
| 4. | மின்சாரப் பொருட்கள் வழங்கல் | 100 00 |
| 5. | வாகனத் தகடுகள் தயாரித்து வழங்கல் | 25 00 |
| 6. | சீருடைத் துணிகள், சப்பாத்துகள் வழங்கல் | 50 00 |
| 7. | மின் தூண்கள் வழங்கல் | 50 00 |
| 8. | சித்த ஆயுர்வேத மருந்துகள் வழங்கல் (அங்கீகாரம் உடையவர் மட்டும்) | 50 00 |
| 9. | வீடுகளுக்கு உள்ளக மின் இணைப்புச் செய்தல் | 50 00 |
| 10. | புத்தகங்கள் கட்டுதல் | 25 00 |
| 11. | தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் விநியோகம் | 50 00 |

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை,
தலைமையலுவலகம் சுழிபுரம்.
14. 11. 1990.

11085

---

## 1991-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் மேற்குப்பிரதேசசபை சுழிபுரம்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சுழிபுரம் / சங்கானை / வட்டுக்கோட்டை / அராலி ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க்குறிக்கப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 12-12 1990-ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றிற்கான கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப் பத்திரப்பணத்தையும் 26-11-1990 -ம் திகதியிலிருந்து 7-12-1990-ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி சம்பந்தமான தேவையான விபரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1. சுழிபுரம் | 1. சத்தியக்காட்டுச்சந்தை | 25,050,00 | 100 00 | 25 00 |
| | 2. பல்லகுட்டிச்சந்தை | 8,800.00 | 100.00 | 25.00 |
| | 3. தொல்புரம் மத்திய சந்தை | 500.00 | 50.00 | 25.00 |
| | 4. பொன்னாலைச்சந்தை | 2,000 00 | 100 00 | 25.00 |
| | 5. மாட்டிறைச்சிக்கடை | 8,000.00 | 100.00 | 25.00 |
| | 6. ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 50.00 | 25.00 |
| | 7. புதிய சந்தைக்கடை இல:5 | 25,000·00 | 250 00 | 25.00 |
| | 8. கருவாட்டுக்கடை | 500.00 | 50.00 | 25,00 |
| 2. சங்கானை | 1. மாட்டிறைச்சிக்கடை | 48,050 00 | 250 00 | 25.00 |
| | 2. ஆட்டிறைச்சிக்கடை | 3,100 00 | 100.00 | 25.00 |
| | 3. கருவாட்டுக்கடை | 1,000.00 | 100.00 | 25,00 |
| | 4, பொது மரக்கறிச் சந்தை | 50,050.00 | 250.00 | 25.00 |
| | 5.மீன் சந்தை | 48,050.00 | 250.00 | 25.00 |
| 3. வட்டுக் கோட்டை | 1. பொதுச் சந்தை | 27,535.00 | 100.00 | 25.00 |
| | 2. ஆட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 100 00 | 25.00 |

குறிப்பு: வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆட்டிறைச்சிக் கடைகளுக்கு சித்தியெய்திய கேள்விக்காரர் பிரமாணங்களுக்கு அமைய தாமே வியாபாரத் தளத்தை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை
தலைமையலுவலகம் சுழிபுரம்.
14. 11. 1990

11084

# சிறிய செய்திகள்

## கிளிநொச்சியில் ஜனசக்தி விநியோகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜூலை மாதத்திலிருந்து வழங்குவதற்கான ஜனசக்திப் பத்திரங்கள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

இப்படிவங்கள் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் உதவி பெறுவோருக்கு வழங்கப்பட்டுவருவதாகக் கிளிநொச்சி அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். (ப-6)

## 'திவயின' ஆசிரியருக்கு அபராதம்

1988-ல் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயகாவின் பேச்சைத் தமது பத்திரிகையில் பிரசுரித்து நீதிமன்றத்தை அவமதித்ததாக 'திவயின' என்ற சிங்களப்பத்திரிகையின் ஆசிரியர் எட்மன் ரணசிங்கவுக்குப் பத்தாயிரம் ரூபா அபராதம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பில் மோசடி

குவைத்தில் இருந்து வேலையற்றுத் திரும்புவோருக்கு "ஜப்பான்" இல் வேலை வாய்ப்புத் தேடிக் கொடுப்பதாகப் பலர் பெருந்தொகையான பணத்தை மோசடி செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துப் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும், இங்ஙனம் ஏமாற்றப்பட்டவர்கள் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் இலங்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு நிறுவனப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## நல்.கிராமிய வங்கி மாற்று ஏற்பாடு

நல்லூர் கூட்டுறவுக் கிராமிய வங்கியில் பணப்புழக்கம் இன்மையால் யூன் மாதம் முதல் நல்லூர்த் தொகுதி ஓய்வூதியம், அநாதைக் கொடுப்பனவு பெறுபவர்கள் தமக்குரிய பணத்தைப் பெற முடியாது திண்டாடிய நிலை மாறிவிட்டது.

தற்போது அவர்களுக்குரிய நிலுவைக் கணக்கில் இருந்து நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல்வேறு பொருட்களையும் விநியோகித்து வருகின்றது.

இதைவிட (ஸ்ரான்லி) மக்கள் வங்கியில் மாற்றக் கூடிய காசோலைகளையும் மேற்படி வங்கி வழங்கி வருகின்றது.

நல்லூர் பல நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பெ. கனகசபாபதியையும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கத்தையும், நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் தூதுக்குழு அதன் தலைவர் திரு அ. செல்வத்துரை தலைமையில் சென்று சந்தித்ததனையடுத்தே ஓய்வூதியக்காரரின் இப் பொருளாதாரப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வங்கி வட்டி வீதம் அதிகரிப்பு

மக்கள் வங்கியில் தனி நபர்களுடைய வைப்புப் பணத்திற்கும், கூட்டுறவுச் சங்கங்களின் நிரந்தர வைப்புப் பணத்திற்கும், சாதாரண சேமிப்பு வைப்புப் பணத்திற்கும் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் வட பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (74)

## கல்வி அதிகாரியாக சண்முகராசா நியமனம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்திற்குப் பொறுப்பான, புதிய பிரதம கல்வி அதிகாரியாக ப. சண்முகராசா நியமிக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவுக் கல்விக் கோட்டத்திற்குப் பொறுப்பாகவிருந்த இவர் முன்பு காங்கேசன்துறை, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் வட்டாரக் கல்வி அதிகாரியாக நீண்டகாலமாகப் பணிபுரிந்தவர்.

இவ்விரு வட்டாரங்களையும் அடக்கும் பண்டத்தரிப்புக் கோட்டத்தின் சகல பாடசாலைகளதும் விபரங்களை இவர் நன்கறிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும், குறைந்த பட்ச ஊதியம் 2,500 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்திக் கொழும்பில் கடந்த திங்கட்கிழமை மாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர். சுலோக அட்டைகளையும் இவர்கள் தாங்கியிருந்தனர்.

## கண்நோய் பரவுகிறது

கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் கண்நோய் பரவும் ஆபத்துள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இது வேகமாகப் பரவும் ஒரு வைரஸ் நோய் என்றும் 3—4 நாளுக்குள் தணிய ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

நோயாளி வெய்யிலில் திரியக்கூடாது. சுகதேகிகளோடு பழகுவதைத் தவிர்த்தல் அவசியம்.

கண்களில் கடி, நீர்வடிதல் கண் சிவத்தல் ஆகியன இந்நோயின் குணங் குறிகளாகும்.

## திருடர் தொல்லை

அண்மைய இராணுவத் தாக்குதல் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்துள்ள தெல்லிப்பழைப் பகுதியில் திருடர்கள் தொல்லை மேலும் அதிகரித்துள்ளது.

இரவுவேளை தெல்லிப்பழைப் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள இ. பத்மநாதன் என்பவரது வீட்டின் ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டியையும், பெறுமதிமிக்க எவர்சில்வர் பாத்திரங்களையும் மற்றும் வீட்டுடமைகளையும் திருடிக் கொண்டு கதவுகளை உடைத்து வெளியேறியுள்ளார்கள். களவு போன பொருட்களின் பெறுமதி சுமார் 25,000 ரூபா வரை இருக்கும் எனக் கூறப்படுகிறது. (ப-10)

---

பாராளுமன்றத்தில் தினேஷ் சாடல்

# பிரபாகரன் விடயத்தில் ஜே. ஆர். அடைந்தது பலத்த தோல்வியே

"தற்போதைய மாகாணசபை முறையை அறிமுகப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரபாகரனின் வாள் கோட்டே பாராளுமன்றத்தில் தொங்கவிடப்படும் என்றார். ஆனால் அது நடக்கவில்லை. பிரபாகரனின் யுத்தம் வடக்கில் தொடர்கிறது" என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும், மகரகம எம். பியுமான திரு. தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் குறை நிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் அவர் பேசுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

"மாகாண சபை மூலம் அதிகாரம் பன்முகப்படுத்தப்படவில்லை. கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொத்துவில், கல்முனையில் உள்ளோர் அலுவல்களைக் கவனிக்கத் திருகோணமலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. உண்மையில் இது அதிகாரப் பரவலாக்கலே இல்லை. அதிகாரக் குறைப்பே ஆகும்" என்றும் அவர் கூறினார்.

### வாசுதேவ

அதிகாரப் பரவலாக்கலை சகல மட்டங்களிலும் ஆதரித்துக் குரலெழுப்பிய திரு. வாசுதேவ நாணயக்கார சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டால் நாடு பிளவுபடும் என்று எச்சரித்தார்.

கேர்ணல் அநுருத்த ரத்வத்த பேசுகையில்; மாகாண சபையின் பெயரால் ஐ. தே. கட்சியின் அதிகாரம் பன்முகப்படுத்தப்படுகிறது என விபரித்தார்.

## தினை விற்பனை தாராளம்

யாழ் நகரப் பகுதியில் தமிழ்ப் பிரதேச பண்டைய உணவுப் பொருளான தினை தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

முன்னைய காலங்களில் குரக்கன்மா மட்டுமே அரிதாக விற்பனை செய்யப்பட்டுவந்தது. தினை கடைகளில் விற்பனைக்குக் கிடைக்காமலும் இருந்துவந்தது.

தற்போது அரிசி, கோதுமைமா போன்ற உணவுப் பொருட்களுக்கு ஈடாகவும், இணையாகவும் கடைகளில் விற்கப்படும் தினை ஒரு கிலோ 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (50)

## எரிபொருள் இனி ஏன் சூரியன் துணையாகிறது

இன்னும் ஒரு சிலவருடங்களில் எரிபொருளுக்கு உலகம் பூராவும் பலத்த தட்டுப்பாடு ஏற்படுமென் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளதை அடுத்து பெற்றோல், டீசல் ஆகியவற்றுக்கு மாற்றுச் சக்திகளைக் கண்டறிவதற்கான முயற்சிகள் முடக்கிவிடப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சிகளின் பயனாக சூரிய சக்தியில் இயங்கக் கூடிய 'சோலர் சைக்கிளை' பிரிட்டிஷ் விஞ்ஞானி எலன்சாள்ஸ் என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

சைக்கிளின் கைப்பிடியில் பொருத்தப்பட்ட 'கைப்பி' என்ற கண்ணாடிகள் சூரிய சக்தியை ஒரு தடவை கிரகிப்பதனால் ஏற்படும் சக்தியைக்கொண்டு இலகுவாக 30 மைல்கள்வரை மணிக்கு 15 மைல் வேகத்தில் இந்த சைக்கிளில் சவாரி செய்யலாம். காலக்கிரமத்தில் தூரத்தையும் வேகத்தையும் கூட்டக் கூடியவாறு இருக்கும் எனவும் சாள்ஸ் கூறியுள்ளார். (16)

## தேசிய டிப்ளோமா பெற்றவருக்கு விரைவில் ஆசிரிய நியமனம்

விஞ்ஞானம், கணிதம், ஆரம்பம், மனைப்பொருளியல், ஆங்கிலம், உடற்கல்வி ஆகியவற்றில் தேசிய போதனா டிப்ளோமா பாடநெறியை இவ்வாண்டு இறுதியில் பூர்த்திசெய்து வெளிவர விருப்பவர்களை ஆசிரியர்களாக நியமிக்கக் கல்விச் சேவை ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இதற்கிணங்க ஒவ்வொரு கோட்டத்திலும் மேற்குறிப்பிட்டபாட ஆசிரியர்களுக்கு உள்ள வெற்றிடங்களைச் சேகரித்துக் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கும் அதன் பிரதியை யாழ் கல்வித் திணைக்களத்திற்கும் அனுப்புமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட கோட்டக்கல்வி அதிகாரிகளைக் கடிதம்மூலம் கோரியுள்ளார். (ப- 17)

## வவுனியாவில் இராணுவத்தால் இரு தமிழர் அடித்துக் கொலை

வவுனியா இராணுவ முகாமில் இராணுவத்தால் இரு தமிழர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அறுவரில் செ. கெமிக்ரர், வசீர் ஆகிய இருவருமே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றைய நால்வரின் முடிவு இதுவரை தெரியவரவில்லை. இச்சம்பவம் வவுனியாவில் கடந்த வாரம் நிகழ்ந்துள்ளது. (38)

## புலிகள் மீதான அச்சமே யூரியாத் தடைக்குக் காரணமாம்

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு யூரியாப் பசளையை எடுத்துச்செல்ல அரசு தடைவிதித்ததேன்?

புலிகள் மீதான அச்சமே அதற்குக் காரணம் என்கிறார் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ஏ. எம். யூ. செனிவிரத்ன.

யூரியா பசளையிலுள்ள நைதரசன் இரசாயனப் பொருட்களைக் கொண்டு நிலக்கண்ணி வெடிகளைத் தயாரிக்கிறார்கள். இதனால் யூரியாவைத் தமிழ்ப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாகப் புதிய பசளையை அறிமுகம் செய்ய நடவடிக்கையெடுக்கப்படும் எனப் பிரிகேடியர் தெரிவித்திருக்கிறார்.

## பிரான்ஸ், நோர்வே யாழ் நகரக் காட்சிகள்

யாழ் கோட்டையில் புலிக்கொடி பறப்பது, யாழ்நகர அழிவுப்படங்கள் அடங்கிய வீடியோ படக்காட்சிகள் நோர்வே, பிரான்ஸ் நாடுகளில் காண்பிக்கப்பட்டன.

## மயிலிட்டி மாணவர் கவனத்துக்கு...

ஜி. சி. ஈ (சா த) பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் நிரப்புவதன் பொருட்டு, பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மயிலிட்டி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையின் பழைய புதிய (1-ம் 2-ம் வருட) மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் திங்கள். செவ்வாய்க்கிழமைகளில் முற்பகல் பத்துமணிக்கு பண்டத்தரிப்பு கோட்டக் கல்வியலுவலகத்தில் சமுகமளிக்குமாறு வண. சகோதரி நிசெற்றா கோரியுள்ளார்.

## மாநகரசபையில் திருட்டு

யாழ்ப்பாணம் மாநகர சபை வளவில் ஆறு காவலாளிகளும், ஒரு மேற்பார்வையாளரும் பகலில் காவல் கடமையில் இருந்தபோது முன் பக்க வெளிவாசல் கதவில் இருந்த பூட்டுச் சங்கிலி களவு போயுள்ளது.

இக்களவு பற்றிமூன்று நாட்களுக்குள் விளக்கம் தரும்படி மாநகரசபை மராமத்து பொறியியலாளர், கடமை நேரத்தில் காவலில் இருந்த ஆறு காவலாளிகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

## மாவிட்டபுரச் சந்தியில் வீடுகள் தகர்ப்பு

மாவிட்டபுரம் சந்திக்கு வந்த இராணுவத்தினர் அங்கு இருந்த நான்கு வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர். (71)

## உலக அரங்கில்

### நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் சந்திரசேகர் வெற்றி!



இந்தியாவின் புதிய பிரதமர் சந்திரசேகர் தன்மீதான நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று லோக்சபாவில் நடைபெற்ற எட்டுமணி நேர விவாதத்தைத் தொடர்ந்து நம்பிக்கைத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது 269 உறுப்பினர் ஆதரவாகவும், 204 உறுப்பினர் எதிராகவும் வாக்களித்தனர். 15 உறுப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. நேற்றைய லோக்சபா கூட்டத்தில் 488 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

நம்பிக்கைத் தீர்மானம் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து லோக்சபா காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ராபிராய் அறிவித்தார்.

### குவைத் மற்றுமோர் வியட்நாமாகாது என்கிறார் புஷ்

சவுதிஅரேபியாவுக்கு மேலதிகமாகத் துருப்புகள் அனுப்பப்படுவது ஈராக்கை எச்சரிக்கை செய்வதற்கே என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

சிலர் நினைப்பதைப்போன்று வியட்நாமில் நடந்ததைப்போன்று குவைத்தில் இடம்பெறாது. இரண்டு சம்பவங்களும் வெவ்வேறு அரசியல் பின்னணிகொண்டவை என ஜனாதிபதி புஷ் தனது தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே குவைத்திலும், ஈராக்கிலும் ஈராக்கியத் துருப்பினர்களின் நடமாட்டத்தையும், ஆயுத விபரங்களையும் கண்டறியும் நோக்கில் அமெரிக்கா அலான்றிஸ் விண்கலத்தை அனுப்பியுள்ளது. இதில் ஒற்றுவேலை செய்யக்கூடிய தொலைநோக்கிகளும், கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மொசாம்பிக் அகதிகள் அடிமைகளாக விற்பனை

மொசாம்பிக் அகதிகளைத் தென்னாபிரிக்காவில் அடிமைகளாக விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மொசாம்பிக் அரச படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து பெருமளவிலான மொசாம்பிக் வாசிகள் அருகிலுள்ள தென்னாபிரிக்காவுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்தனர். இவர்களில் இளம் ஆண்களும், பெண்களும் அடிமைகளாக மலிவாக விலை பேசபபட்டு தென்னாபிரிக்காவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றனர். எனினும் இந்த அகதி அடிமை வியாபாரம் குறித்துத் தமக்கு ஏதும் தெரியாது என எல்லைக்காவல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### சிவானந்தனுக்கு பதவியுயர்வு

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.இ. சிவானந்தன் பதவி உயர்வு பெற்று யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரியாக நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (12)

### இலவச மூக்கு கண்ணாடி

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்படவிருந்த இலவச மூக்குக் கண்ணாடி விநியோகம் நாளை 18 ஆம் திகதி ஞாயிறு காலை சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டரில் வைத்து வழங்கப்படவுள்ளது. (48)

### காலமானார்

### திரு. அருளானந்தம் மனோகரன்

(கிராமசேவை உத்தியோகத்தர், விவேகானந்தா நகர் கிளிநொச்சி முன்னாள் C. O. இராமநாதபுரம்)

திரு. அருளானந்தம் மனோகரன் 15-11-1990 ல் அகால மரணமானார். இவர் ஏழாலை, காலஞ்சென்ற செல்லப்பா அருளானந்தம் தம்பதிகளின் புதல்வரும், ஞானாம்பாளின் அன்புக் கணவரும், பிரிந்தினி, அமிர்தகிரணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதானந்தன், திருமதி உதயணன் இந்துமதி, ஸ்ரீரஞ்சிதராஜா, திருமதி இரத்தினராஜா ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிளிநொச்சி வ்வாகப் பதிவாளர் கணபதிப்பிள்ளை அருளம்பலம், திருமதி இராசரத்தினம் திலகவதி, திருமதி கணேஸ் புவனேஸ்வரி, திரு. க. ஏகாம்பரம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 16-11-90 ல் வட்டக்கச்சியில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

11089 தகவல்; க. ஏகாம்பரம்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 17-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### பிரதமர் சந்திரசேகர் கருத்து!

# இலங்கைத்தமிழர் விடயத்தில் வி. பி. சிங் அவசரப்பட்டுவிட்டார்

"ஸ்ரீலங்காவைப் பொறுத்தமட்டில் வி. பி. சிங் அரசு தனக்கு முந்திய அரசின் நடவடிக்கைகளை ரத்துச் செய்யும் ஒரே நோக்குடன் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காது, செயற்பட்டிருக்கக் கூடாது" என்று பாரதப் பிரதமராகப் பதவியேற்றிருக்கும் திரு. சந்திரசேகர் சண்டே என்ற வார இதழுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

ஸ்ரீலங்கா பற்றிப் புதிய பிரதமர் கருத்துத் தெரிவிப்பது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா பிரச்சினையை முநதிய அரசு கையாண்ட விதம் பற்றிக் குறிப்பிட்ட திரு. சந்திரசேகர், "அது அவசரமான முடிவு என்பதே எனது அபிப்பிராயம். மாறுதல்கள் படிப்படியாக, உறுதியாக, கொண்டுவரப்பட வேண்டும் முந்திய அரசோடு வன்மம் பாராட்டிக் கொண்டு திடீர் முடிவுகள் எடுத்தால், சிக்கல்கள் ஏற்பட்டு தேச நலனும் பாதிக்கப்படலாம்" என்றார்.

இந்தியப் பிரதமர் பிரச்சினையை நேரடியாகக் குறிப்பிடாதபோது, அமைதிப் படையை அவசரப்பட்டு வாபஸ் வாங்கியதையே அவர் குறிப்பிட்டதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### வீர மரணம்

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் வசாவிளான் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஈழம் (மகாலிங்கம் சுகந்தன், ஏழாலை) வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். (71)

### யாழ் அரசாங்க அதிபர் நேற்றுத் திரும்பினார்

யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட், செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ஐ. நித்தியராஜ் ஆகியோர் நேற்றுக் குமண கப்பல் மூலம் இங்கு வந்தடைந்தனர்.

அவர்களின் கொழும்பு விடயம் பயனுள்ளதாக அமைந்துள்ளது என அறியப்படுகிறது.

அரச அதிபர் தனது கொழும்புப் பயணம் சம்பந்தமான விடயங்களை இன்று செயலகத்தில் நடைபெறவிருக்கும் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிப்பார். (66)

### ஆசிரியர்—

கூட நிராகரிக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (70)

### தெற்கில்...

கர் ஒருவர் கொழும்பு வந்தபோது அவரின் 3 லட்சம் ரூபா பணம் காள்ளையடிக்கப்பட்டது.

### வ. பி. போ. ச.

இவர்களின் தற்போதைய நிலைமைகள் குறித்து கொழும்பில் இடம்பெற்ற உயர்மட்டப் பேச்சுக்களையடுத்து அரசு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (66)

### அம்பாறை ..

லிம் கலவரம போன்ற காரணங்களால் மட்டக்களப்பில் இருந்து அம்பாறைக்குச் செல்லும் பல தமிழ் ஊழியர்கள் வேலைக்குச் செல்லவில்லை. ஆனால் நிலைமை படிப்படியாக திரும்பத் தொடங்கிய பின்னர் அவர்கள் வேலைக்குச் சென்றுவருகின்றனர். எனினும் திடீரென்று இந்த ஊழியர்களின் சம்பளம் தற்பொழுது நிறுத்தப்பட்டிருக்கின்றது.

### யாழ் ..

அதிபருக்கு மகஜர் மூலம் முறையிட்டுள்ளார்.

வசதிபடைத்தவர்கள் தொடர்ந்து தர்மப்பணம் எடுத்துக் கொண்டிருக்கையில் நோயுடன் தள்ளாடும் வயதில் தனக்கு இளைக்கப்பட்டுள்ள அநீதி பற்றி அம் மூதாட்டி அரசாங்க அதிபருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். (36)

### அம்மன் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி மறைவு

அரியாலைப் பகுதியில் உள்ள பிரசித்திபெற்ற அம்மன் கோயில் ஒன்றில் அம்மனுக்கு நேர்த்திக்கடனாகப் பகதர் ஒருவரால் வழங்கப்பட்ட தங்கச்சங்கிலி, அம்மன் கழுத்தில் இருந்து மாயமாக மறைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கோயில் நிர்வாகத்தினர் கோயிலுக்கு புதிய அர்ச்சகர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்கிலியின் பெறுமதி ஒரு பவுணுக்கு மேல் எனவும் தெரியவருகிறது. (33)

### ஒருலட்சம் அரச ஊழியர் ஓய்வுபெற விண்ணப்பித்தனர்

உரிய வயதை அடையு முன்னே இளைப்பாறும் சலுகையை, அண்மையில், அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து, கடந்த வார இறுதி வரை ஒரு லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் இளைப்பாற விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இத்தனை பெரும் எண்ணிக்கையினர் இளைப்பாறுவதால் அரச சேவையில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

இளைப்பாற முன்வந்தோருள் பயிற்சி பெற்ற 30,000 பேரும் அடங்குவர் இவர்கள் ஓய்வு பெற்றால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படும்என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பென்ஷனில் செல்வோருக்குப் பதிலாக இளைஞர்களை வேலைக்கமர்த்துவது பற்றி அரசு ஒரு தீர்மானமும் எடுக்கவில்லை.

### 'சக்கடத்தார்' தற்கொலை

அண்மைக் காலமாக கடும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த பிரபல வானொலி நாடகக் கலைஞர் "சக்கடத்தார்" என அழைக்கப்படும் இராஜரட்ணம் நேற்று நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். (ப 24)

### பலாலி முகாமில் நினைவு சின்னம்

பலாலி ராணுவ முகாமில் சண்டையின் போது கொல்லப்பட்ட ராணுவத்தினருக்கு நினைவுச் சின்னம் ஒன்று நேற்றுத் திறக்கப்பட்டது. ராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்க, டென்சில் கொப்பேகடுவ ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

### திரியாய் ..

மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார்.

தற்போதைய போர் தொடங்கிய நாளில் இப் பாடசாலையில் அமைந்திருந்த இம்முகாம் மீது விடுதலைப் புலிகளின் தொடர் தாக்குதல் காரணமாக இம்முகாமைவிட்டு இராணுவத்தினர் ஓடியது குறிப்பிடத்தக்கது. (71)

### அட்மிரலின்...

வெளியிட்ட முதலமைச்சர் கருணாநிதி, "கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் சாதாரணமானவர்கள். இதனாலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அட்மிரல் ராம்தாஸின் குற்றச்சாட்டு உள்நோக்கம் கொண்டது" எனக்கண்டனம் தெரிவித்தார்.

ஓர் அரச அதிகாரி தமிழ்நாடு அரசின் நடவடிக்கை குறித்து விமர்சிக்க எந்த உரிமையும் கிடையாது எனவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

### வன்னியில் மாவீரர் தினம்

மாவீரர் தினத்தினை வன்னியில் அனுஷ்டிக்கப் பரந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான கலந்துரையாடல்கள், ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றது.

அதேவேளை மாவீரர் தினம் மிகவும் விமரிசையான முறையில் வவுனியா, மன்னார். முல்லைத்தீவுப் பகுதிகளில் கொண்டாடப்படவுள்ளன. (11)

### புல்மோட்டை ..

களையும், இறந்தவர்களையும் தூக்கிக்கொண்டு முகாமிற்கு ஓடிவிட்டனர்.

இதன் பின்பு மீண்டும் பிற்பகல் 1 30 மணியளவில் இதேஇடத்திற்கு வந்த ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் நடாத்தினர்.

புலிகளின் மிதிவெடியில் சிக்கிய ஒரு இராணுவச் சிப்பாய் காலை இழந்தார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் காலிழந்தவரையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு முகாமிற்கு பின்வாங்கி விட்டனர். (17)